**தலைப்பு 327 - காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 327 - காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 06 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 387.97 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 376.66 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தினது மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 11.31 மில்லியன் அதாவது 2.92 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 322.97 | 320.67 | 2.30 | 0.71 |
| மூலதனம் | 65.00 | 55.99 | 9.01 | 13.86 |
| மொத்தம் | 387.97 | 376.66 | 11.31 | 2.92 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு ஏனைய 03 அமைச்சுக்களினால் கூட்டுமொத்தமாக ரூபா 25.8 மில்லியன் நிதிஏற்பாடு அனுப்பப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அதில் ரூபா 23.9 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 1.9 மில்லியன் அதாவது 7 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதி ஏற்பாட்டை வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 0.80 | 0.73 | 0.07 | 8.75 |
| காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 20.00 | 18.48 | 1.52 | 7.60 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 5.00 | 4.66 | 0.34 | 6.80 |
| மொத்தம் | 25.80 | 23.87 | 1.93 | 7.48 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 20.92 | 20.91 | 10.92 | 13.51 | 65.00 | 55.15 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0414/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 9.76 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ்வரும் 04 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 504,728 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0002/0161/000 | 3,000 |
| 6000/0000/00/0013/0114/000 | 162,707 |
| 6000/0000/00/0016/0104/000 | 291,821 |
| 6000/0000/00/0018/0105/000 | 47,200 |
| மொத்தம் | 504,728 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே குறிப்பிடப்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் ஏனைய பதிவேடுகளும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை |
| (ii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதி 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்கள்**

06 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சினைச் கொண்டிருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

32701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 184,250 தொகையான நிலுவை கடன் மீதியொன்று 03 வருடங்கள் அளவிலான காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**3.4.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் மாவட்ட அலுவலகங்களை மேவுகை செய்யும் வகையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) காணி அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 44.4 மில்லியன் பெறுமதியான 06 வாகனங்கள் திணைக்களத்தால் முறைப்படி கையேற்கப்படாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுமதி வெளிப்படுத்தப்படாத காணி அமைச்சிற்குச் சொந்தமான மேலும் 06 வாகனங்கள் மற்றும் மேலும் 03 நிறுவனங்களின் 03 வாகனங்கள் என்பன திணைக்களத்தால் முறைப்படி கையேற்கப்படாமல் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

## 3.6 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மீள்திருத்தப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 02 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 43 சதவீதம் மற்றும் 53 சதவீதமாக இருந்தன.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 40 | 23 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 547 | 518 | 29 |
| (iv) | ஆரம்ப நிலை | 97 | 82 | 15 |
| | மொத்தம் | 685 | 623 | 62 |

**(ஆ) முறையற்ற வகையில் வேறு தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

2002 ஆம் ஆண்டு முதல் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தரொருவர் காணி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.